1969 செப்டம்பர் 11]

கேற்ப துவக்கப் பள்ளிகளுக்கான புத்தகங்களை எழுதுவதிலும் வல்லவர்களாக இருக்கிறார்கள். அதனால் துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் எழுதக் கூடாது என்பது அல்ல. அவர்கள் எழுதிய புத்தகங்களும் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய அளவுக்குத் தகுதி பெற்றிருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

திரு. டி. மார்டின் : மேலை நாடுகளில் விஞ்ஞானம் வியத்தகு முன்னேற்றம் அடைந்து வரும் நேரத்தில் நாம் பழைய சில பசையே வைத்துப் பாடம் நடத்துவதை விட்டு விட்டு, மேலை நாடுகளிலிருந்து புத்தகங்களை வாங்கிக்கொண்டு வந்து, அவற்றைத் தமிழாக்கம் செய்து, அந்தந்த வகுப்புகளில் புகுத்தும் முறையை இந்த அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் பழைய சிலபசை வைத்துக் கொண்டில்லை. ஐம்பது ஆண்டு, அறுபது ஆண்டு காலத்திற்கு முன்பு வகுக்கப்பட்ட சிலபஸின் அடிப்படையில் சொல்லிக் கொடுக்கப்படவில்லை. அவ்வப்போது ஆராய்ந்து, இருக்கிற சூழ்நிலைக்கேற்ப எந்த அடிப்படையில் பாடத் திட்டம் இருக்க வேண்டுமென்று வகுத்துத் தருகிறார்கள். அந்தப் பாடத் திட்ட அடிப்படையில்தான் ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். அதுதான் நடைமுறைக்கு வருகிறது. மாணவர்களுக்கு விஞ்ஞான அறிவு அதிகமாக ஆக வேண்டுமென்பதற்காக இந்திய அரசின் துணையோடு இந்த மாநில அரசு முயற்சிகளை மேற்கொண்டு அதற்கான திட்டங்களைத் தொடர்ந்து நீட்டி வருகின்றது.

திரு. கரு. சீமைச்சாமி : ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை பாடப் புத்தகங்களில் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுதல் இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒரே பாடப் புத்தகமாக வைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த முயற்சியின் அடிப்படையில் அரசே முதல் வகுப்பில் இருந்து பத்தாவது வகுப்பு வரை பாடப் புத்தகங்களைப் போடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள்

*198 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாயூரம் நகராட்சி பராமரிப்பிலுள்ள உயர்நிலைப்பள்ளிகள் இரண்டையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆமெனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நகராட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்படும் உயர்நிலைப் பள்ளிகளை மேற்கொள்வதில்லையென அரசாங்கம் முடிவெடுத்துள்ளது என்றாலும், உயர் நிலைப் பள்ளிகளை ஆரம்பிப்பதற்காக நகராட்சி மன்றங்களுக்கு அளிக்கும் தற்போதைய உதவித் தொகை வீதத்தை 50 சதவிகிதத்திலிருந்து 66-2/3 சதவிகிதமாக இதற்கிணங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : மாயூரம் மாதிரி இடங்களில் இரண்டு நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் உள்ள பகுதிகளிலாவது இரண்டில் ஒன்றை அரசாங்கமே எடுத்து நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது எல்லா நகராட்சி மன்றங்களும் சேர்ந்து 96 உயர்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றன. அவற்றை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எல்லா நகராட்சிகளுமே கேட்டுக் கொண்டு வருகின்றன. ஆகவே, 50 சதவிகிதம் உதவி கொடுக்கப்பட்டு வந்தது தற்போது ஓரளவு உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாப் பள்ளிகளையுமே அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று விண்ணப்பித்து வருகிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

Debt due to Central Government

* 199. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the total amount of debt including interest due thereon to the Central Government by the Government of Madras as on date; and

(*b*) whether the Government has made a request to the Central Government to reschedule and rephase the debt repayment?

THE HON. THIRU K. A. MATHIALAGAN :

(*a*) The information is available for the financial year as a whole in the Budget documents already placed on the Table of the House.

The figures at the end of 31st March 1968 are :

(1) Amount of debt	...	Rs. 317.10 crores
(2) Interest due thereon in 1968–69	...	Rs. 14.70 crores

(*b*) Yes, Sir. The Government have suggested certain proposals for rescheduling and rephasing of the debt repayment.

THIRU K. VINAYAKAM : Sir, may I know whether this debt which is due by this Government to the Central Government comprises also the money that was advanced to the State Government under Famine Relief Works and also relief works connected with the cyclone that struck our State some years back? Also, did the Government request the Central Government to write off that debt incurred in connection with the famine and cyclone